## அணி மேலாளர்கள் கவனத்திற்கு

1. தங்கள் மாவட்டத்திலிருந்து பங்கு பெறும் மாணவ மாணவியர்களின் வருகையை 27.10.2024 அன்று இரவு 8 மணிக்குள் கண்டிப்பாக பதிவு செய்யுமாறு அணி மேலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களால் நியமனம் செய்யப்பட்டவர்கள் மட்டுமே அணி மேலாளர்களாக செயல்பட அனுமதிக்கப்படுவர் அணி மேலாளர்களாக நியமனம் செய்யப்பட்ட உத்தரவு படிவத்தினை கையுடன் எடுத்து வர வேண்டும்

3. மாணவ / மாணவிகள் தங்கும் இடத்தினை தூய்மையாக வைத்துக் கொள்வதுடன் எந்தவித சேதமும் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் சேதம் ஏற்படின் அணி மேலாளர்கள் முழு பொறுப்பேற்க வேண்டும்.

4. மாணவ / மாணவிகள் தங்குவதற்கு தங்குமிடங்களில் தனித் தனியாக மாவட்டத்திற்கு ரூபாய் 500 வீதம் வைப்புத் தொகை செலுத்த வேண்டும் அத்தொகை நிறைவு நாளன்று திரும்ப வழங்கப்படும்

5. மாணவ / மாணவிகள் தங்கும் இடத்தில் அணி மேலாளர்கள் கண்டிப்பாக தங்க வேண்டும் ஒரு அணி மேலாளருக்கு மட்டுமே தங்கவும் உண்ண உணவும் அனுமதிக்கப்படுவர் மற்றவர்கள் வெளியில் தங்க வேண்டும்

6. அணி மேலாளர்கள் கூட்டம் 27.10.2024 அன்று மாலை 8 மணிக்கு தங்கும் இடத்திலேயே நடைபெறும்.

7. அணி மேலாளர்கள் போட்டி நடைபெறும் நாட்களில் போட்டிகள் துவங்கி நிறைவு பெறும் வரை கண்டிப்பாக விளையாட்டு அரங்கத்தில் இருத்தல் வேண்டும். ( மாணவ / மாணவியர்கள் பங்கேற்க வெற்றி பெற்றோர் சான்றிதழ் பெற மற்றும் தங்கள் மாவட்ட வீரர்களுக்கு உதவி புரிய அறிவுறுத்தப்படுகிறார்கள்).

8. போட்டியில் பங்குபெறும் அனைத்து போட்டியாளர்கள் தங்களுடைய தனிநபர் அடையாளப் படிவம் (Individual ID Form ) கையில் இருப்பின் மட்டுமே போட்டிகளில் பங்கு பெற அனுமதிக்கப்படுவார்கள்

9. போட்டிகளில் பங்குபெறும் மாணவ / மாணவியர்கள் மற்றும் நடுவர்கள் தவிர மற்றவர்கள் விளையாட்டு அரங்கத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

10. போட்டி நடைபெறும் காலம் குளிர்காலமாக இருப்பதால் போர்வை உட்பட தங்குவதற்கு உடைமைகளையும் பங்கு பெறுவதற்குரிய உடைமைகளையும் செஸ் போர்டு மற்றும் செஸ் கிளாக் கொண்டுவர அறிவுரை வழங்கி எடுத்து வருதல் வேண்டும்

11. FIDA விதிகளின்படி போட்டிகள் நடத்தப்படும்

12. மாணவ மாணவியர்களுக்கு 28.10.2024 அன்று ஒரு நாள் மட்டும் (காலை, பிற்பகல், இரவு) உணவு வழங்கப்படும்.

13. அணி மேலாளர்கள் கவனத்திற்கு போட்டிகளுக்கு வருகை புரியும் மாணவ மாணவியர்கள் தங்குமிடத்திற்கு வருகை புரிந்த பிறகு எந்த ஒரு காரணத்திற்காகவும் தங்கும் விடுதியை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் இதற்கு முழு பொறுப்பும் அணி மேலாளர்கள் மட்டுமே.

14. போட்டிகள் நடைபெறும் அரங்கம் மற்றும் தங்கும் விடுதி இடங்களில் எந்த ஒரு இடையூறும் ஏற்படுத்தாமல் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

15. போட்டி நடைபெறும் கல்லூரி ஜெயின் நிர்வாகத்தை சார்ந்தது ஆகவே கல்லூரி வளாகத்திற்குள் அசைவ உணவை தவிர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறாகள்.

மேற்காண் அனைத்து தகவல்களையும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் அந்தந்த மாவட்ட பொறுப்பாளர்களுக்கு விளையாட்டு பங்கேற்கும் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.